

அரியலூர் மாவட்டம் வாரணவாசியில் கேஸ் சிலிண்டர் லாரி வெடித்து விபத்து நடந்த இடத்திற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் விரைந்து சென்று பார்வையிட்டு விபத்து குறித்து காவல்துறையினரிடம் கேட்டறிந்து பாதுகாப்பு பணியை துரிதப்படுத்த அறிவுறுத்தினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நெடுஞ்சாலைத்துறை சார்பில்

# 120 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.13 -**

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் ரூ.61.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை திறந்து வைத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 98 இளநிலை வரைதொழில் அலுவலர் உள்ளிட்ட 120 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர் களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் 61 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் இரயில்வே கடவுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 98 இளநிலை வரைதொழில் அலுவலர், 14 உதவியாளர் மற்றும் 8 தணிக்கை உதவியாளர், என மொத்தம் 120 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்க ளுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத்துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய சாலைகள் அமைத்தல், புதிய பாலங்களை கட்டுதல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

**விருதுநகர் மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட சாலை மேம்பாலத்தை திறந்து வைத்தல்**

விருதுநகர் மாவட்டத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் - சிவகாசி - விருதுநகர்- அருப்புக்கோட்டை - திருச்சுழி - நரிக்குடி - பார்த்திபனூர் சாலையில் இரயில்வே கடவு எண்.427-க்கு மாற்றாக ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கிடையே சாட்சியாபுரத்தில் 61 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

**பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

நெடுஞ்சாலைத்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை நெடுஞ்சாலைத்துறை சார்பில் 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 129 உதவிப் பொறியாளர்கள், 186 உதவியாளர்கள், 139 இளநிலை உதவியாளர்கள், 73 தட்டச்சர்கள், 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை - III, 3 தணிக்கை உதவியாளர்கள் ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாகவும், 45 இளநிலை உதவியாளர்கள், 3 உதவி வரைவாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர்கள் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் கருணை அடிப்படையிலும், என மொத்தம் 1061 நபர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத்துறையின் 98 இளநிலை வரைதொழில் அலுவலர், 14 உதவியாளர் மற்றும் 8 தணிக்கை உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகா னந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) ஆர்.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் (நெ) திட்டங் கள் முனைவர் ஆர்.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 6 திருக்கோயில்களைச் சேர்ந்த

# 16 அர்ச்சகர்கள் - 31 பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.13 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 6 திருக்கோயில்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது திருக்கோயில்களை பழமை மாறாமல் புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளோடு, திருக்கோ யில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலன்களை பாதுகாத்திடும் வகையில் தமிழர் திருநாளை முன்னிட்டு 2 இணை புத்தாடைகள்/சீருடைகள், துறை நிலையிலான மற்றும் சேமநல நிதியின் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்வு, பொங்கல் கருணைக் கொடை, குடும்ப நலநிதி உயர்வு, ஒரு கால பூசைத் திட்ட அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை, அவர் தம் பிள்ளைகள் உயர்கல்வி பயில ரூ.10,000/ கல்வி உதவித்தொகை, அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், கட்டணமில்லா முழு உடற்பரிசோதனைத் திட்டம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 632 குடியிருப்புகள் கட்டுவதற்கு பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அவற்றில் 95 அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் நிறைவு பெற்றுள்ளன. அவற்றிற்கான ஒதுக்கீட்டு ஆணைகள் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும், பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டம், தங்கசாலை, அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயில், சைதாப்பேட்டை, அருள்மிகு காரணீசுவரர் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம், கிருஷ்ணன் கோவில், அருள்மிகு கிருஷ்ணசாமி திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டம், திருநீர்மலை, அருள்மிகு ரெங்கநாதப் பெருமாள் திருக்கோயில், தருமபுரி மாவட்டம், குமாரசா மிப்பேட்டை, அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 6 திருக்கோயில் கள் சார்பில் ரூ.10.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன்,1இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழக துணை அமைப்புச் செயலாளர்

# தாயகம்கவி தாயார் சௌந்தரி அம்மாள் படத்திறப்பு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தார் - கழக முன்னணியினர் பங்கேற்பு!

*சென்னை, நவ. 13 -*

*கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம்கவி தாயார் சௌந்தரிஅம்மாள் திருவுருவப்படத்தை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பகம் கலை, டி.கே.எஸ். இளங்கோவன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா முன்னிலை வகித்தனர்.*

*கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. தாயார் திருமதி.சௌந்தரி அம்மாள் அவர்கள் கடந்த மாதம் 27.10.2025 அன்று இயற்கை எய்தினார்கள்.*



*10.11.2025 அன்று மாலை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் அன்னாரின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து மலர் மாலை தூவி அஞ்சலி செலுத்தினார்.*

*மேலும் இந் நிகழ்விற்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, வெள்ளக்கோயில் சாமிநாதன், மேயர் பிரியாராஜன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செய்தி தொடர்பாளர் டி. கே.எஸ். இளங்கோவன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஐ. பரந்தாமன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல்மாலிக், சட்டத்துறை மாநில துணைச்செயலா ளர்கள்கே.எஸ்.ரவிச்சந்திரன்,கொளத்தூர் சந்துரு, தலைமைக்கழக வழக்கறிஞர் கவிகணேசன், கழக அயலக அணியின் மாநில துணைச்செயலா ளர்கள் கன்னிகை ஸ்டாலின், பரிதி.இளம்சுருதி,*

*சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் துலுக்காணம், சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன்.உதயசங்கர்,சென்னை கிழக்கு மாவட்ட கலை இலக்கிய துணை அமைப்பாளர் கனல் கங்கா, சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பட்டாளம் எம்.செந்தில்குமார்,*

*திரு.வி.க.நகர் வடக்கு பகுதிக்கழக நிர்வாகிகள் கேப்டன் ராஜன், புல்லட் ரமேஷ், கினார் ஆறுமுகம், புவனாவதி, திருவிக நகர் வட்ட கழக செயலாளர்கள் வட்ட கழக செயலாளர்கள் எம் ஏ. டிக்கா, அபாய், தமீம்பாய், 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.சரவணன்,*

*சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதிகள் செட்டில்மெண்ட் நாமதேவன், கே.எம்.கார்டன் கி.நாகலிங்கம், எச்.திவாகர், 76வட்ட பகுதி பிரதிநிதி வி.கிருஷ்ணன், திருவிக நகர் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் சிவ. கௌதம், வேலு, 71வட்ட பொருளாளர் சங்கர், வட்ட துணைச்செயலாளர் 71வட்ட துணைச்செயலாளர் பாலாஜி, மாவட்ட பிரதிநிதி சுவீட் பாபு, பகுதிபிரதிநிதி சிக்கன் ராமமூர்த்தி, பகுதி அயலக அணி வசீம், சுலைமான்,*

*74வட்ட பொருளாளர் வெங்கடேசன், ஆதிதிராவிடர் நலஅணி பகுதி அமைப்பாளர் ஜெகதீசன்,சுலோர் மணி, மாவுமில் சேகர், செட்டில்மன்ட் ஊர் தலைவர்குண்டு மோகன், மஞ்சமுத்து, முல்லைநாதன், ராகவன், பாதர்ஞானசேகரன் தீபா, சுமதி ராஜலட்சுமி, சுலோர்மணி, சுலைமான், பழனி,நதீம்பாய், வட்ட துணை செயலாளர் சுரேந்திரன், விளையாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் எம்.ராஜேஷ்குமார், என்.சி.சேகர், புல்லட் வி. பாபு, கே.எம்.கார்டன் அ.சுரேஷ், சி.மாவீரன், காந்திஜி சண்முகம், சிவா, பிரகாஷ்,சைதை இளங்கோவன், கிரானைட்சுரேஷ்,, டிக்சன், பிரதீப்,சாம்,பிரசன்னா, பாக இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சுரேஷ்*

*சைதை மேற்கு பகுதி கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதிக்கழக செயலாளர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், ,தா.மோகன்குமார், தலைமை பொது குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், சைதை.த.சம்பத், வட்டச் செயலாளர்கள் நேரு நகர் பாட்சா, வழக்கறிஞர் பிரேம் ஆனந்த், தேனைதவ மணி ஏ.கே.ஆனந்த்*

*சைதை கிழக்கு பகுதி துணைச் செயலாளர் மு. ஆரோக்கியம்,மாவட்ட பிரதிநிதி சைதை த.மணி, வழக்கறிஞர் சைதை எம்.ஜி மதிவாணன், சைதைபகுதி இளைஞர்அணி துணை அமைப்பாளர் சுகுமார், கொடிசுரேஷ், சோனா கருப்பையா, சைதை பகுதி சிறுபான்மை அணி அமைப்பாளர் ஜி.ஜே. மோசஸ், 140 வட்ட து செயலாளர் ஆனந்தன் . திரு வள்ளூர் மாவட்ட துணை ச்செயலாளர் உமாமகேஸ்வரி, சென்னை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டுவன், கலை இலக்கிய பகுத்தறிவு அணி மாவட்ட அமைப்பாளர் தாமோதரன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார்,சேலம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராமன்,கும்மிடிபூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆனந்தன், மாவட்டப் பிரதிநிதி போரூர் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

### தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் 'வெற்றி நிச்சயம்' திட்டத்தின் மூலம்

# திறன் பயிற்சி பெற்ற 170 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி சான்றிதழ்கள்!

## ஊக்கத்தொகை காசோலை – பணி நியமன ஆணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, நவ. 13 -*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) சென்னை, நந்தனம் மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற 170 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி சான்றிதழ்கள், ஊக்கத்தொகை காசோலை மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கிடையே திறன் பயிற்சி அளிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.*

*L&T நிறுவனத்தின் கப்பல் கட்டுமான தொழிற்சாலை சென்னை காட்டுப்பள்ளியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை 100க்கும் மேற்பட்ட பாதுகாப்பு மற்றும் வணிக கப்பல்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. இந்த கப்பல் கட்டுமானத்துறையில் உள்ள திறன் பெற்ற பணியாளர்களின் பற்றாக்குறையை களையும் நோக்கில் ஐடிஐ தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நான்குமாத பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்த இன்று L&T நிறுவனம், இந்திய கப்பற்படை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியோருக்கு இடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.*

*300 Manufacturing technician பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் வகையில் Delphi TVS நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*IITM நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து Advanced Electronics Manufacturing, Basics of Electronics and Embedded system with sensors, Biosensors & Bioinstrumentation, CNC EDM Wire cutting practice, CNC programming & Machining, Digital Manufacturing practice, Embedded Technology with IoT, Multilayer PCB design & Fabrication, PLC and its industry application, Power Electronics and Drives, Certification Course on Intelligent Data Centre Management உள்ளிட்ட உயர்தொழில் நுட்ப பயிற்சிகளை 1,000 நபர்களுக்கு அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*Dixon Technologies Padget Electronics Private Limited நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து SMT and FATP modules அடிப்படையில் பயிற்சியினை 300 நபர்களுக்கு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*GTTI implementating German Dual Vocational and Education Training நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து CNC Turning, CNC Milling, CAD/ CAM/Design software பயிற்சியினை 2,700 நபர்களுக்கு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*HCL Tech Training நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து தூத்துக்குடி மற்றும் விளாத்திக்குளம் பகுதியை சேர்ந்த 2,500 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு பெற்றத்தரவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*இந்நிகழ்ச்சியில், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் திட்ட முதன்மை செயல் அலுவலர் எம். ஜெயபிரகாசம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக திட்ட இயக்குநர் (தொழில் நுட்பம்) திருமதி. எஸ்.சாந்தி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக திட்ட இயக்குனர் கே.வி.ராஜ்குமார், திருநெல்வேலியைச் சேர்ந்த திறன் பயிற்சி பெற்ற மாணவர் அகிலாண்டம், உயர் அலுவலர்கள் மற்றும் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் கலந்து கொண்டனர்.*



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பின்னல்வாடி கிராமத்தில் ரூ.115 கோடியே 3 லட்சத்து 48 ஆயிரம் மதிப்பீட்டில், 23 கிராமங்கள் பயன் பெறும் வகையில், புதிதாக அமைக்கப்படவுள்ள 110/22KV துணை மின் நிலையக் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.11.2025) செவ்வாய்க்கிழமை அன்று அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள், இந்நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் ப.ராஜவேல், நகர மன்றத் துணைத் தலைவர் யு.எஸ்.வைத்தியநாதன், மாவட்ட கவுன்சிலர் பிரியா பாண்டியன், நகர கவுன்சிலர் கலா சுந்தரமூர்த்தி, பிடாகம் ஊராட்சி மன்ற தலைவர் நந்தகுமார், துணைத்தலைவர் ஷம்சாத் மற்றும் மின்வாரிய உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டர்.




நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், காட்டுக் கூடலூர் ஊராட்சி, பாரதி தெருவில், 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை, சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அ.குணசேகரன், சுமதி நந்தகோபால், ஜெகநாதன், ஞானசேகரன், பாரிவள்ளல், செல்வகுமார் பாலகிருஷ்ணன், பத்மநாபன், பன்னீர், கார்த்திக், கோதண்டபாணி, குமாரவேல் அன்பழகன், வெங்கடேசன், ஜெயபால் , அண்ணாமலை, குமார், முருகவேல், விஜயலக்ஷ்மி, மணி மொழி குணசேகரன், ராமு, பூபதி, பாண்டியன் ஊராட்சி செயலாளர் இராசேந்திரன், உள்ளிட்ட நிர்வாகிகளும், பொதுமக்களும், மகளிர் சுய உதவி குழு பெண்களும் கலந்து கொண்டனர்.